**இனிமையான குழந்தைகளே ! உங்களுடைய கல்வி புத்தியினுடையதாகும். புத்தியைத் தூய்மைப்படுத்துவதற்கு இல்லறத்தில் மிகவும் யுக்தியோடு நடந்து கொள்ள வேண்டும். உணவில் பத்தியம் இருக்க வேண்டும்.**

கேள்வி: ஈஸ்வரனுடைய செயல் மிகவும் அதிசயமாக இருக்கிறது மேலும் குப்தமாக (ரகசியமாக) இருக்கிறது. எப்படி?

பதில்: ஒவ்வொருவருடைய கர்மங்களின் கணக்கு வழக்கையும் முடிக்க வேண்டிய பணி மிகவும் அதிசய மாகவும் மிகவும் குப்தமாகவும் இருக்கிறது. யார் எவ்வளவு தான் தனது பாவ கர்மங்களை மறைக்க முயற்சி செய்தாலும். மறைக்க முடியாது. நிச்சயமாக தண்டணையை அனுபவிக்க வேண்டி யிருக்கும். ஒவ்வொரு வருடைய கணக்கும் மேலே இருக்கிறது. ஆகையால் பாபாவினுடையவராகிய பிறகு ஏதாவது பாவம் நடந்தால் உண்மையை தெரிவிப்பதால் பாதி மன்னிப்பு கிடைத்து விடும் என பாபா கூறுகின்றார். தண்டனைகளும் குறைந்து போகும். மறைக்காதீர். ஒன்று திருடினாலும் திருடன் தான் லட்சம் திருடினாலும் திருடன் தான்...... என்று கூறப்படுகிறது. மறைத்தால் தாரணை செய்ய முடியாது.

ஓம் சாந்தி. யாருடைய நினைவில் அமர்ந்திருக்கிறீர்கள். தாய் தந்தை பாப்தாதா இப்போது வருவார் கள். வந்து குழந்தைகளாகிய நமக்கு தனது ஆஸ்தியைக் கொடுப்பார்கள் என குழந்தைகள் கூறிக்கொள்கிறீர்கள். பாபாவிடமிருந்து நாம் மீண்டும் 5000 வருடத்திற்கு முன்பு போல சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைந்து கொண்டு இருக்கின்றோம். இது ஒவ்வொருவரினுடைய மனதிலும் இருக்கும் அல்லவா? இப்போது இந்த நரகம் என்ற மூங்கில் காடு தீப்பற்றி எரியப் போகின்றது. உங்களுக்கு இந்த உலகத்தில் இருப்பவரோடு எந்த தொடர்பும் இல்லை. உங்களுடைய ஞானமும் குப்தமாக இருக்கின்றது. ஆஸ்தியும் குப்தமாக இருக்கின்றது. லௌகீக அப்பாவின் ஆஸ்தி வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த அப்பாவினுடைய சொத்தை கண்களினால் பார்க்கிறார்கள். அப்பாவையும் பார்க் கிறார்கள். மேலும் ஆஸ்தியையும் பார்க்கிறார்கள். இப்போது நம்முடைய ஆத்மாவும் குப்தமாக இருக்கிறது. இந்த கண்களினால் ஆத்மாவையும் பரமாத்மாவையும் பார்க்க முடியாது. லௌகீக உறவில் தன்னை உடல் என புரிந்து கொண்டு, இவரை (உடலை) கூட இந்த கண்களினால் பார்க்கிறார்கள். மேலும் உடலைக் கொடுக்ககூடிய தந்தையையும் பார்க்கிறார்கள். டீச்சர், குருவையும் பார்க்கிறார்கள். இங்கேயோ இந்த தந்தை, டீச்சர், குரு அனைவரும் குப்தமாக (மறைவாக) இருக்கிறார்கள். ஆத்மாக்களாகிய நமக்கு இப்போது ஞானத்தின் மூன்றாவது கண் கிடைத்திருக்கிறது என குழந்தைகள் அறிகிறார்கள். முன்பு மூன்றாவது கண் இல்லை. ஆத்மா தூங்கிக் கொண்டு இருந்தது. இப்போது ஆத்மாவை எழுப்புகிறார். ஆத்மாவும் குப்தமாக இருக்கின்றது. ஆத்மா வந்து உடலில் நுழைவது போல சிவபாபாவும் இந்த உடலில் வந்து நம்மை சொர்க்கத்திற்கு அதிபதியாக மாற்றிக் கொண்டு இருக்கின்றார். நாம் பல முறை பாபாவிடமிருந்து அரைக் கல்பத்திற்காக ஆஸ்தியை அடைந்தோம் என புத்தி கூறுகிறது. பிறகு அரைக்கல்பத்திற்கு இழந்து விடுகின்றோம். இப்போது நாம் மீண்டும் ஸ்ரீமத்படி தன்னுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபனை செய்து கொண்டு

இருக்கின்றோம். ஸ்ரீமத் கொடுக்கக்கூடியவர் கூட குப்தமாக இருக்கின்றார். நாம் பரம்பிதா பரமாத்மா விடமிருந்து குப்த ரூபத்தில் கேட்டுக் கொண்டு இருக்கின்றோம் என உங்களுடைய ஆத்மாவிற்குத் தெரிகின்றது. நிச்சயம் ஆத்ம உணர்வுடையவராக மாற வேண்டும். முதலில் ஆத்மா, பிறகு சரீரம் ஆகும். ஆத்மா அழிவற்றது. பாபாவும் அழிவற்றவர். பாபா எடுக்கக்கூடிய உடல் அழியக் கூடியது ஆகும். இந்த உடலில் வந்து குழந்தைகளே! குழந்தைகளே! என்கிறார். மேலும் நான் தெய்வீக சத்யுக சுயராஜ்ஜியத்திற்காக உங்களை முயற்சி செய்விக்க வந்துள்ளேன் என நினைவு படுத்துகிறார். முழுமையாக முயற்சியும் செய்ய வேண்டும். சத்யுகத்தில் உங்களுடைய இராஜ்யம் மட்டுமே இருக்கும். நீங்கள் இராஜ்யம் செய்தீர்கள். பிறகு மறுபிறவி எடுக்க வேண்டியதாக இருக்கிறது. யார் ஸ்ரீ கிருஷ்ணருடைய வம்சத்தினராக மற்றும் தெய்வீக குடும்பத்தினராக இருந்தனரோ அவர்களே மீண்டும் இருப்பார்கள். வேறு யாரும் இருக்க மாட்டார்கள். சந்திர வம்சத்தின் குலத்தினரும் இருக்க மாட்டார்கள். இது மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டிய வி^யம் ஆகும். உண்மையில் சத்யுகத்தில் எந்த தர்மமும் இல்லை. இப்போது நிறைய தர்மம் இருக்கின்றது. தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கின்றனர். பலவிதமான ஒலிகள் எழுகிறது. சத்யுகத்தில் தர்மமே ஒன்று என்பதால் சத்தம் எழுவதில்லை. எனவே குழந்தைகளாகிய நீங்கள் குப்தமாக தனது இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டு இருக்கின்றீர்கள். நாம் நம்முடைய இராஜ்ஜியத்தில் உயர்ந்த பதவி அடைவதற்காக முயற்சி செய்து கொண்டு இருக்கின்றோம் என ஒவ்வொருவரும் கூறுகின்றனர். எனவே இவ்வளவு பராக்கிரமசாலியாக வேண்டும். உங்களுடைய பெயரே சிவ சக்திகள். சிங்கத்தின் மீது யாரும் சவாரி செய்யவில்லை. சக்திகளை சிங்கத்தின் மீது அமர வைத்து மகிமை செய்கிறார்கள். நீங்கள் எந்த சிங்கத்தின் மீதும் அமரவில்லை. நீங்கள் மாயையை வெற்றி அடைகிறீர்கள். இந்த வீரத்தைக் காண்பிப்பதால் உங்களுடைய பெயர் சிவசக்தி சேனை என வைக்கப்பட்டு இருக்கின்றது. இங்கே கோபிகைகளும் இருக்கின்றார்கள். ஆனால் பெரும்பாலானோர் தாய்மார்கள் ஆவர். அபவித்திரமான இல்லற மார்க்கத்திலிருந்து தூய்மையான இல்லறமார்க் கத்திற்கு நீங்கள் அழைத்துச் சொல்கிறீர்கள். சத்யுக விஷ்ணுபுரியில் நாம் மிகவும் சுகமாக இருந்தோம் என நீங்கள் அறிகிறீர்கள். தூய்மை சுகம் சாந்தி அனைத்தும் இருந்தது. இங்கேயோ எவ்வளவு துக்கம் இருக்கின்றது. வீட்டில் குழந்தைகள் கெட்டவர்களாக இருந்தால் எவ்வளவு துன்புறுத்துகிறார்கள். அங்கேயோ எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எல்லையற்ற தந்தை மீண்டும் எல்லையற்ற சுகத்தைக் கொடுப்பதற்காக வந்திருக்கிறார் என அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இல்லறத்தில் இருங்கள். புத்தியில் மட்டும் நீங்கள் கடைபிடியுங்கள். இந்த படிப்பு புத்தியினுடையதாகும் என பாபா கூறுகின்றார். வீட்டில் இருந்தாலும் ஸ்ரீமத் படி நடங்கள். உணவினால் கூட பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே யுத்தியோடு நடக்க வேண்டும். ஒவ்வொருவருடைய கர்ம பந்தனமும் அவரவருடையதாகும். சிலர் பந்தனத்தில் இருக்கிறார்கள், சிலர் பந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கிறார்கள், சிலரோ புத்திசாலித்தனமாக ஓதி ஓதி விடுபட்டு விடுகிறார்கள். நிறைய யுக்திகள் புரியவைக்கப்பட்டுள்ளன. தூய்மையாகுங்கள் என்பது பாபாவின் கட்டளை எனக் கூறுங்கள். நான் உங்களுக்கு பக்தியின் பலனைக் கொடுப்பதற்காக வந்திருக்கின்றேன். எனவே நிச்சயமாக பகவானின் வழிப்படி நடக்க வேண்டும். அப்போது தான் தண்டனையில்லாமல் நாம் முக்தி, ஜீவன்

முக்தியைப் பெறலாம். பல பிறவியின் சுமை தலை மீது இருக்கின்றது. எப்படி பாபா ஒரு நொடியில் முக்தி ஜீவன் முக்தி அளிக்கின்றாரோ அதே போன்று தண்டனைகள் கூட ஒரு நொடியில் கிடைத்து விடுகிறது. ஆனால் அனுபவிப்பது நிறைய இருக்கின்றது. காசியில் சென்று உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். அந்த சிறிது நேரத்தில் நிறைய தண்டனைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால் கணக்கு வழக்கு முடிகிறது. நீங்கள் தண்டனை இல்லாமல் கணக்கு வழக்குகளை முடிக்க வேண்டும். ஆகவே தண்டனை அடையாத அளவிற்கு முயற்சி செய்ய வேண்டும். பாபாவை நன்கு நினைக்க வேண்டும். வினாசம் எதிரில் இருக்கின்றது. வினாச காலத்தில் பாண்டவர்களுடையது அன்பான புத்தியாக இருந்தது. பாபா நேரடியாக வந்து அன்பு வைத்திருக்கிறார். மற்றவர்களிடம் அன்பு வைத்து என்ன செய்வது? அது அனைத்தும் அழிந்து போகும். ஒரு தந்தையை மட்டும் நினைக்க எலும்பு தேயும் அளவிற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலோட்டமாக நண்பர்கள் உறவினர்களிடம் நலன் விசாரிக்கப்படுகிறது. ஆனால் மனம் ஒரு தந்தையிடம். இந்த உடல் சம்பந்தமான பிரியதர்ˆன் பிரியதர்ஷினி ஒருவரை ஒருவர் நினைக் கிறார்கள். நீங்கள் சிவபாபாவினுடைய பிரியதர்ஷினிகள். அவர் உங்கள் முன்பாக இருக்கின்றார். அவர் உங்களை நினைக்கிறார், நீங்கள் அவரை நினையுங்கள். சிவபாபா இந்த உடலில் வந்து ஆத்மாக்களின் நிச்சயதார்த்தத்தை தன்னுடன் செய்விக்கிறார். ஆத்மாக்களுக்கு பரம்பிதா பரமாத்மாவுடன் நன்மை நடக்கக்கூடிய திருவிழா என இதற்கு கூறப்படுகிறது. நீங்கள் ஞான கங்கைகள், ஞானக்கடல் ஒருவரே ஆவார். தந்தையை நினைவு செய்வதால் விகர்மம் அழிவும். தந்தை வேறு எந்த துன்பத்தையும் அளிக்கவில்லை. தூய்மையாக மட்டும் ஆக வேண்டும். காமம் மிகப்பெரிய எதிரி. இதனை வெற்றி அடைவதால் நீங்கள் கிருஷ்ணபுரிக்கு அதிபதியாகிறீர்கள். பாபாவின் கட்டளை தூய்மையாகினால் 21 பிறவிகளுக்கு இராஜ்யத்தைப் பெறுவீர்கள். பதீதமாவதைக் காட்டிலும் பாத்திரம் தேய்த்து வாழ்வது நல்லதாகும். ஆனால் தேக உணர்வு போகாத காரணத்தினால் ஆஸ்தியைக் கூட இழந்து விடுகிறார்கள். பாருங்கள், பாபா எவ்வளவு பெரியவராக இருக்கின்றார், பதீத உலகம், பதீத உடலில் வந்திருக்கிறார். சிவபாபாவை சோம்நாத் கோவிலில் பூஜித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த பாபா இச்சமயம் எவ்வளவு சாதாரணமாக இருக்கிறார் பாருங்கள். இப்போது பரமாத்மாவே பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். இதன்படி நடக்கவில்லை என்றால் பதவியை இழந்து விடுவீர்கள்.

குழந்தைகளே தூய்மையாகுங்கள் என பாபா கூறுகின்றார். இப்போது அனைவரும் கீழானவர்களாக இருக்கிறார்கள். யார் தூய்மையானவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் உயர்ந்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அரசாங்கம் நீங்கள் அனைவரையும் உயர்ந்தவர்களாக மாற்றுங்கள் என சந்நியாசிகளின் கூட்டத்தை. உருவாக்கியிருக்கிறது. ஆனால் சத்யுகத்தில் தான் உயர்ந்தவர்கள் இருப்பார்கள். இங்கே யாரும் இருக்க முடியாது. தூய்மையானவர்களைத் தான் உயர்ந்தவர் என்று கூற முடியும். சந்நியாசிகள் தூய்மையாக இருக்கிறார்கள். ஆனால் அபவித்திரத்தினால் பிறவியை எடுக் கிறார்கள். ஏனென்றால் இருப்பதே மாயையின் இராஜ்யத்தில் தான். யாரும் யோக சக்தியினால் பிறவிகள் எடுப்பதில்லை. மனதை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள் என பாபா குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார்.

சிறிது கூட அகங்காரம் இருக்கக் கூடாது. முற்றிலும் ஏழை யாகி விடுதல் நல்லதாகும். பாபா ஏழைப் பங்காளனாக இருக்கின்றார். ஆஹா ஏழ்மை! ஏழ்மை! ஏழை களைப் பணக்காரர்களாக மாற்ற வேண்டும். பாரதத்தை ஏழையிலிருந்து பணக்காரராக மாற்றுகிறேன் என பாபா கூறுகின்றார். பாரதவாசிகள் தான் மாறுவார்கள். மேலும் யார் ஸ்ரீமத்படி நடக்கிறார்களோ அவர்களே மாறுவார்கள். அவர்களே சொர்க்கத்திற்கு அதிபதியாக முடியும். பாபா எளிய இராஜயோகத்தை கிருஷ்ணபுரி அல்லது சொர்க்கத்திற்கு அதிபதியாவதற்காகக் கற்றுக் கொடுக்கிறார். தூய்மையாகுங்கள் என்பது பாபாவின் கட்டளையாகும். வேறு எந்த ஒரு மனிதரையும் நாம் குரு என்று ஏற்றுக் கொள்வதில்லை. தூய்மையின் வி`யத்தில் தான் அதிகமாக சண்டை சச்சரவு ஏற்படுகிறது. சிலருக்கு அடி கிடைக்கும். வீட்டிலிருந்து வெளியே அனுப்பி விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள். பாபா அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றார். ஆனால் பாபாவிடம் வந்து பிறகு உறவினர்களின் நினைவு வந்தால் மேலும் நஷ்டம் ஆகிவிடும். இவ்வாறும் கூடாது. பிறகு இரண்டு கப்பலில் இருந்தும் வெளியே போய் விழுகிறார்கள். ஞானத்தை தாரணை செய்யவில்லை என்றால் திருந்துவது இல்லை. பழைய நடத்தைகளே இருக்கும். இங்கேயோ எந்த பாவ கர்மமும் செய்யக் கூடாது. நீங்கள் புண்ணிய ஆத்மா ஆக வேண்டும். ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் இது பாவமா இது புண்ணியமா என்று தன்னைத் தானே கேளுங்கள். எந்த பாவம் செய்திருந்தாலும் அதை பாபாவிற்கு கூறிவிட்டால் பாதி பாவம் நீங்கிவிடும் என பாபா புரிய வைக்கிறார். நிறைய குழந்தைகள் நாங்கள் இதைச் செய்தோம் என கூறுகிறார்கள். இது குற்றமாகும். இவரால் பதீதமாகினோம். எவ்வளவு விகர்மம் செய்திருக்கிறார்கள் என பாபா விற்குத் தெரியும் அல்லவா! இப்போது எந்த பாவமும் செய்யாதீர். இல்லை என்றால் ஒரேயடியாக தண்டனை அடைய வேண்டி இருக்கும். பிறகு தர்ம ராஜ்புரியில் காட்சிகள் காட்டுவார். நீங்கள் இவ்வாறெல்லாம் பாவம் செய்து மறைத்தீர்கள். மறைக்க முடியாது. சரி பார்ப்பதில்லை, அந்த தந்தைக்கு நன்கு தெரியும் அல்லவா! தர்மராஜிடம் அனைத்து கணக்கும் இருக்கின்றது. ஈஸ்வரிய செயல்பாடுகள் மிகவும் அதிசயமாகவும் மிகவும் குப்தமாகவும் இருக்கின்றது. நிச்சயமாக பாவம் செய்திருக்கிறார்கள். அதனால் தான் அடுத்த பிறவியில் மோசமான வீட்டில் பிறவி எடுத்துள்ளார்கள் என கூறுகிறார்கள் அல்லவா! எனவே நிச்சயம் சேமிப்பாகிறதல்லவா! மேலே கணக்கிருக்கிறதல்லவா? இப்போது அந்த கணக்கு இங்கே இருக்கிறது. ஆகவே இப்போது எந்த பாவமும் செய்யக்கூடாது என பாபா புரிய வைக் கின்றார். ஒன்று திருடினாலும் திருடன் தான் 100 திருடினாலும் திருடன் தான் என்று கூறப்படுகிறது. நாம் மிகவும் பெரிய பாவம் செய்கின்றோம், பிறகு பதவி கீழானதாகிவிடும் என புரிந்து கொள்ள வேண்டும். தாரணை ஆகவில்லை என்றால் ஈஸ்வரிய சேவை செய்ய முடியாது. மற்றவர் களுக்கும் நன்மை செய்ய வேண்டும். இவ்வாறு நேரத்தை வீணாக்கினால் பாவம் செய்து கொண்டேயிருந்தால் பதவி குறைந்து போகும். பிறகு கல்ப கல்பத்திற்கும் அந்த பதவியே நிலைத்துவிடும். எனவே எவ்வளவு முடியுமோ முயற்சி செய்யுங்கள். பாபாவிடம் ஏன் வருகிறீர்கள் என கேட்கிறார்கள். சூரிய வம்ச இராஜ்யத்தின் ஆஸ்தி அடைவதற்காக என்கிறார்கள். எனவே கண்டிப்பாக ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். என் மூலமாக எந்த கெட்ட வேலையும் அல்லது பாவமும் நடக்கவில்லையா என பார்க்க வேண்டும். இல்லையென்றால் 100 மடங்கு தண்டனை கிடைக்கும். பிறகு வேலைக்காரர்களாக ஆகிவிடுவீர்கள். இங்கே இதற்காகவா வந்துள்ளீர்கள். மம்மா பாபா என்று கூறுகின்றீர்கள்

என்றால், நரனிலிருந்து நாராயணன் ஆகவேண்டும் அல்லவா? தாரணை யில்லாமல் பதவி எப்படி பெறுவீர்கள். மம்மா பாபா என்று கூறிக்கொண்டே தாய் தந்தையின் சிம்மாசனத்தில் அமரவில்லை என்றால் முழுமையாகப் படிக்கவில்லை என்று புரிந்து கொள்ளுங்கள். மம்மா பாபா நரனிலிருந்து நாராயணனாக பெண்ணிலிருந்து லட்சுமி ஆகிறார் அல்லவா? உங்களுக்கும் பாபா அதையே படிக்க வைக்கிறார் அல்லவா? எனவே பாபாவிடமிருந்து முழு ஆஸ்தி அடைய வேண்டும் அல்லவா? பலர் மறைத்து மறைத்து பாவம் செய்து கொண்டேயிருக்கிறார்கள். தெரிவிப்பது இல்லை. எவ்வளவு தான் புரிய வைத்தாலும் விடுவதில்லை. திருடனுக்கு பழக்கமாகி விட்டால் திருடாமல், பொய் சொல்லாமல் இருக்க முடியாது. உண்மையான தந்தையிடம் உண்மையையே பேச வேண்டும். எங்களால் இந்த பாவம் நடந்து விட்டது மன்னியுங்கள் என்று பாபாவிற்குத் தெரிவிக்க வேண்டும். மாயை பாவம் செய்ய வைத்துவிட்டது. சரி, இருப்பினும் உண்மையைக் கூறினால் பாவம் பாதி மன்னிக்கப்பட்டு விடும். இல்லை என்றால் பாவம் அதிகரித்துக் கொண்டே போகும். சிலர் தொழிலில் பாவம் நடக்கிறது என்று கூறுகிறார்கள். வியாபாரிகள் பாவம் செய்கிறார்கள் என்றால், தர்மத்திற்காக என ஒதுக்குகிறார்கள். அதாவது பாவம் குறையட்டும் என்பதற்காக பாவத்தை செய்து பிறகு புண்ணியத்திற்காக பணத்தை செலவழிக்கிறார்கள் என்றால், அதுவும் நல்லதே! மூழ்குகின்ற படகிலிருந்து இரும்பை எடுத்தாலும் நல்லதே (எரிகிற வீட்டில் பிடுங்கிற வரைக்கும் லாபம்) பாபா ஒவ்வொருவருக்கும் புரிய வைக்கின்றார். பாபா ஒவ்வொரு விசயத்திலும் வழி கொடுக்கின்றார் என்றால், குழந்தைகள் ஒரு போதும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யக்கூடாது. ஆனால் மாயை விடுவதில்லை. நல்ல நல்ல பொருட்களைப் பார்த்தால் உடனே சாப்பிட்டு விடுவார்கள் அல்லது எடுத்துக் கொள்வார்கள். இப்படி பாவ கர்மங்களைச் செய்வதால் தனது பதவியை தாழ்த்திக் கொள் கிறார்கள். பல குழந்தைகள் பாபா, பாபா ! என்று கூறிக் கொண்டே பிறகு கையை விட்டு விடுகிறார்கள். கையை விட்டுவிட்டால் நிலைமை என்னவாகும்? மாயை ஒரேயடியாக பச்சையாக சாப்பிட்டு விடுகிறது. பிறகு கிளிஞ்சல் போல கூட இருப்பதில்லை. வரிசைக்கிரமத்தில் கூட இருக்கிறார்கள் அல்லவா? சுகதாமத்தில் யாராவது சிலர் இராஜ்யம் செய்கிறார்கள், சிலர் சாதாரணமாக இருக்கிறார்கள். வேலைக்காரர்கள் கூட இருப்பார்கள் அல்லவா? இப்பொழுது குழந்தைககளாகிய உங்களுக்கு எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற சொத்து கிடைத்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே பாபாவின் ஸ்ரீமத்படி நடந்து முழுமையாக ஆஸ்தி அடையுங்கள். மரணம் எதிரிலேயே நிற்கிறது. அகால மரணம் நடக்கிறதல்லவா? விமானம் கீழே விழுந்தால் அனைவரும் இறந்து விடுகின்றனர். இது நடக்கும் என யாருக்குத் தெரியும். மரணம் தலைமீது காத்திருக்கிறது. ஆகவே முயற்சி செய்து பாபாவிடமிருந்து ஆஸ்தியை அடைய வேண்டும். ஸ்ரீமத் படி சரீர நிர்வாகத்திற்கான கர்மங்களைச் செய்யுங்கள். கூடவே இந்த படிப்பையும் படியுங்கள். பாபா யுக்திகள் அனைத்தையும் தெரிவிக்கிறார். முயற்சி செய்து தூய்மையாக வேண்டும். அபவித்திரம் ஆவதை விட பாத்திரம் தேய்த்தல் பெருக்குதல் நல்லதாகும். ஆனால் ஆத்ம உணர்வுடையவராக மாற வேண்டும். தூய்மைக்கு மரியாதை இருக்கிறதல்லவா? தூய்மையாகவில்லை என்றால் பதவியை அடைய முடியாது. இது அனைத்தும் குழந்தை களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. குழந்தைகள் உறுதி அடைந்து கெண்டேயிருப்பார்கள். நிறைய பிரஜைகளும்

உருவாக வேண்டும். ஒரு இராஜாவிற்கு ஆயிரக் கணக்கான பிரஜைகள் வேண்டும் அல்லவா? இராஜா ஆவதில் கடின உழைப்பு இருக்கின்றது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த வினாச காலத்தில் மனதின் உண்மையான அன்பை ஒரு தந்தையிடம் வைக்க வேண்டும். ஒருவரின் நினைவில்தான் இருக்க வேண்டும்.

2. உண்மையான தந்தையிடம் எப்பொழுதும் உண்மையாக இருக்க வேண்டும். எதையும் மறைக்கக் கூடாது. ஆத்ம உணர்வுடையவராக இருப்பதற்குக் கடினமாக உழைக்க வேண்டும். ஒரு போதும் அபவித்திரமாகக் கூடாது.

வரதானம் : துக்கத்தின் அலைகளிலிருந்து விடுபட்டு பிரபுவின் அன்பை அனுபவம் செய்யக்கூடிய குஷி என்ற பொக்கிஷத்தால் நிரம்பியவர் ஆகுக.

சங்கமயுக சமயத்தில் துக்கத்தின் அலைகளுக்கான சில விசயங்கள் முன்னால் வரும், ஆனால், தனக்குள் அந்த துக்கத்தின் அலை துக்கமானவராக ஆக்கக்கூடாது. எவ்வாறு வெப்பமான காலத்தில் வெப்பம் இருக்கும், ஆனால், தன்னை காத்துக்கொள்வது தன் கையில் உள்ளது. துக்கமான விசயங்களை கேட்டாலும் அதனுடைய தாக்கம் ஏற்படக்கூடாது. எப்பொழுது அப்படி துக்கத்தின் அலைகளிலிருந்து விடுபட்டவர்கள் ஆகுவீர்களோ, அப்பொழுது பிரபுவின் அன்பிற்குரியவர்கள் ஆகுவீர்கள். யார் அத்தகைய விடுபட்டவர் மற்றும் பரமாத்மாவின் அன்பிற்குரியவர்களோ, அவர்களே குஷிகளின் பொக்கிஷங்களால் நிரம்பி இருக்கின்றார்கள்.

சுலோகன்: யார் மாயையின் பல வேடத்தை எளிதாக அறிந்து கொள்கின்றார்களோ,

அவர்களே திரிகாலதரிசி மற்றும் திரிநேத்ரி (மூன்று கண்களை உடையவர்கள்) ஆவார்கள்.